பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
24 01 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. செமிகண்டக்டர் தொழில் துறையில் உலகின் முதல் 3 இடங்களுக்குள் இந்தியா விரைவில் இடம்பெறும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. திறன் மேம்பாட்டில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

3. தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. இந்தோனேசிய அதிபர் திரு பிரபோவோ சுபியாந்தோ, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

5. பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தொம்பாரே - இங்கிலாந்தின் **Alicia Barnett** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

செமிகண்டக்டர் உற்பத்தித் துறையில் இந்தியா உலகின் முதல் மூன்று இடங்களுக்குள் விரைவில் இடம்பெறும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

டாவோஸில் செய்தி நிறுவனத்திற்குப் பேட்டி அளித்த அவர், செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாக கூறினார்.

முதலீட்டுக்கு ஏற்ற இடமாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் கொள்கைகள் இந்தியாவின் மீதான உலகின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் வணிக நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கைகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு அஸ்வின் வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் ஜக்தீப் தங்கர் பீகார் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

பாரத ரத்னா கர்பூரி தாக்கூரின் 101-வது பிறந்த நாளை முன்னிட்டு பீகார் மாநிலம் சமஸ்திபூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் பங்கேற்கவுள்ளார்.

அதைத் தொடர்ந்து உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெறும் உத்தரப்பிரதேச தின கொண்டாட்டங்களிலும் அவர் பங்கேற்கிறார்.

<<<<>>>>

மும்பையில் தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் புதிய அலுவலகத்தை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று திறந்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியின்போது கூட்டுறவுத் துறையில் பல முக்கிய திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

சர்வதேச கூட்டுறவு ஆண்டாக இந்த ஆண்டு கடைபிடிக்கப்படும் நிலையில் அது தொடர்பான வருடாந்திர நிகழ்ச்சி அட்டவணையை அமைச்சர் வெளியிடவுள்ளார்.

நாடு முழுவதும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கான பயிற்சித் திட்டங்களை திரு அமித் ஷா தொடங்கி வைப்பதுடன் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கான தரவரிசை கட்டமைப்பை அறிமுகப்படுத்தவுள்ளார்.

<<<<>>>>

திறன் மேம்பாட்டில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

டாவோசில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மன்றக் கூட்டத்திற்கிடையே தொழில்துறை பிரதிநிதிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இந்தியா சிறந்து விளங்குவதாகக் கூறினார்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இந்திய இளைஞர்களின் திறன் அபாரமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதுமைக் கண்டுபிடிப்புகளின் மையமாக இந்தியா திகழ்கிறது என்றும் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களில் கால்நடை மற்றும் பால்வளத்துறை திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிதது வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

ஷில்லாங்கில் கால்நடைத் துறை வாய்ப்புகள் தொடர்பான மாநாட்டை தொடங்கி வைதது‌ப் பேசிய அவர், தேசிய பால்வள மேம்பாடு திட்டத்தின் கீழ், வடகிழக்கு மாநிலங்களில் 240 கோடி ரூபாய் செலவில் 29 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் மற்றும் உயர் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

<<<<>>>>

இந்தோனேஷிய அதிபர் திரு பிரபோவோ சுபியாண்டோ 4 நாள் அரசு முறைப் பயணமாக நேற்று இரவு இரவு தில்லி வந்தடைந்தார்.

இந்த ஆண்டு குடியரசு தின கொண்டாட்டங்களின் சிறப்பு விருந்தினராக அவர் பங்கேற்கிறார்.

தில்லி விமான நிலையத்தில் அவரை வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்கெரிட்டா வரவேற்றார்.

தனது 4 நாள் பயணத்தின்போது, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோரை இந்தோனேஷிய அதிபர் சந்தித்துப் பேசுகிறார்.

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடனும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபரில் இந்தோனேஷிய அதிபராகப் பதவியேற்ற பிறகு திரு பிரபோவோ இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், உத்தரபிரதேச முதலமைச்சருமான யோகி ஆதித்யநாத் நேற்று கிராரி, ஜனக்புரி, கரோல் பாக் பகுதிகளில் பொதுக்கூட்டங்களில் பங்கேற்றார்.

தில்லியில் சாலைகளின் நிலை மோசமாக உள்ளது என்றும் இதற்கு ஆம் ஆத்மி ஆட்சியே காரணம் என்றும் அவர் குறை கூறினார்.

பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு. ஜே பி நட்டாவும் நகரின் பல்வேறு பகுதிகளில் பேரணிகளில் உரையாற்றினார்.

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார திட்டப் பலன்களை தில்லி மக்களுக்கு வழங்க ஆம் ஆத்மி அரசு மறுப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலும் நகரில் பல இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தில்லியில் ஆம் ஆத்மி ஆட்சியில் சுகாதாரம் மற்றும் கல்விக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு பவன் கேரா, தில்லி காங்கிரஸ் தலைவர் திரு தேவேந்திர யாதவ் ஆகியோரும் அக்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

<<<<>>>>

இனி கும்பமேளா குறித்த செய்திகள்…

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இதுவரை 10 கோடியே 21 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர்.

மகாகும்பமேளாவவுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மௌனி அமாவாசையை முன்னிட்டு அடுத்த வாரம் பிரயாக்ராஜுக்கு கூடுதல் ரயில்களை இயக்க ரயில்வே முடிவு செய்துள்ளது.

மௌனி அமாவாசை தினத்தில் ஒரே நாளில் 150 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு வி. சோமண்ணா தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரயாக்ராஜில் நேற்று ஆய்வு மேற்கொண்ட அவர், மகா கும்பமேளாவை முன்னிட்டு பிரயாக்ராஜுக்கு மொத்தம் 13 ஆயிரம் ரயில் சேவைகளை இயக்க ரயில்வே முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே ஆயுஷ் அமைச்சகம் சார்பில் கும்பமேளாவில் இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.

இதில் இதுவரை ஒரு லட்சத்து 21 ஆயிரம் பேர் பயன் அடைந்துள்ளனர்.

தினமும் யோகா பயிற்சி நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன.

<<<<>>>>

தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பெண் குழந்தைகளின் கல்வி, அவர்களது பிற உரிமைகளை நிலைநாட்டும் நோக்கில் கடந்த 2008-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24-ம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

பாலின பாகுபாடு இன்றி பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப்பதே இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதனிடையே நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் பாலின விகிதம் 12 புள்ளிகள் அதிகரித்துள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2014-ம் ஆண்டில் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 918 ஆக பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் தற்போது 930 ஆக அதிகரித்துள்ளது என அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

கச்சத்தீவு விவகாரத்தில் இந்தியாவின் உரிமையை நிலைநாட்ட பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதுணையாக செயல்படுவார் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதற்கு காங்கிரஸ், திமுக அரசுகளே காரணம் என்று அவர் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் நேற்று இரவு லேசான நில நடுக்கம் ஏற்பட்டது.

அசாம், மணிப்பூர், மிசோரம் ஆகிய மாநிலங்களில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 4 புள்ளி எட்டாகப் பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

யுக்ரைனுடனான மோதல் தொடர்பாக பரஸ்பர பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் திரு டிமிட்ரி பெஸ்கோவ், ரஷ்யா இதற்காகக் காத்திருக்கிறது என்று கூறினார்.

புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் கூறியிருப்பது புதிது அல்ல என்று அவர் தெரிவிதத்தார்.

<<<<>>>>

கூட்ட நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னை சென்ட்ரலில் இருந்து திருவனந்தபுரத்துக்கு இன்றிரவு மணி 11.50க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

மறுமார்கத்தில் திருவனந்தபுரத்தில் இருந்து வரும் 26ஆம் தேதி இரவு மணி 8.20க்கு சென்னை சென்ட்ரலுக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் வட மாநிலங்களில் பல பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு கடும் குளிர் நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்கம், பீகார், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் சில இடங்களில் இரவு மற்றும் காலை நேரங்களில் கடும் பனிப் பொழிவு காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தில்லியில் அடுத்த 2 நாட்களுக்கு காலை நேரங்களில் பெரும்பாலான இடங்களில் மூடுபனி நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை குறையக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தொம்பாரே - இங்கிலாந்தின் **Alicia Barnett** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-3, 10-2 என்ற செட்கணக்கில் ஸ்லோவேக்கியாவின் **Dalila -** பிரேசிலின் **Laura** இணையை வென்றது.

<<<<>>>>

மணிப்பூரில் பதற்றத்தையும் வெறுப்பையும் தூண்டும் வகையில் கருத்துகளைப் பதிவிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு பைரன் சிங் எச்சரித்துள்ளார்.

இம்பாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் ஊராட்சி மற்றும் தன்னாட்சி மாவட்ட கவுன்சில் தேர்தல்களை நடத்துவது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்றார்.

**<<<<The End>>>>**